**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 605 நாள்: 23.10.2026**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் தொடர்பு கொண்டு புகார்கள் தெரிவிப்பதற்கு தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், 14.10.2026 அன்று நடைபெற்ற அனைத்து மண்டலங்களுக்கான பொறுப்பு அமைச்சர்களுடனான ஆய்வுக்கூட்டத்தில், மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களிலும் கட்டுப்பாட்டு அறை அமைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பொதுமக்களின் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், ட்ரோன் மூலம் மழைக்கால பாதிப்புகள், மழைநீர் தேங்கும் இடங்கள், கால்வாய்கள், சாலைகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

மழைக்காலங்களில் பொதுமக்கள் மழைத் தொடர்பான புகார்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தெரிவிப்பதற்காக ரிப்பன் கட்டடம் தலைமையிடத்திலும், தெற்கு, மத்தியம் மற்றும் வடக்கு என மூன்று வட்டார அளவிலும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் 24/7 மணிநேரமும் செயல்படும் வகையில் இயங்கி வருகிறது. இதில் மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண் மையம், 94450 61913 என்ற வாட்ஸ் ஆப் எண், நம்ம சென்னை செயலி, ட்விட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பொதுமக்களிடமிருந்து வரும் புகார்கள் பெறப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒவ்வொரு மண்டலத்திலும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் இதர புகார்கள் குறித்து இந்தக் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

| வ. எண் | மண்டலம் | கட்டுப்பாட்டு அறை எண் |
|---|---|---|
| 1. | திருவொற்றியூர் | 9445190201 |
| 2. | மணலி | 9445190202 |
| 3. | மாதவரம் | 9445190203 |
| 4. | தண்டையார்பேட்டை | 9445190204<br>8925819481 |
| 5. | இராயபுரம் | 9445190205 |
| 6. | திரு.வி.க.நகர் | 9445190206 |
| 7. | அம்பத்தூர் | 9445190207 |
| 8. | அண்ணாநகர் | 9445190208 |
| 9. | தேனாம்பேட்டை | 9445190209 |
| 10. | கோடம்பாக்கம் | 9445190210 |
| 11. | வளசரவாக்கம் | 9445190211 |
| 12. | ஆலந்தூர் | 9445190212 |
| 13. | அடையாறு | 9445190213 |
| 14. | பெருங்குடி | 9445190214 |
| 15. | சோழிங்கநல்லூர் | 9445190215 |

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**